மயிலாப்பூர்ப் பட்டயம்

பதிப்பாசிரியர் :

ச. பிரகதம்

விலை ரூ. 1-00

தேனோலை

பதினோராம் இதழ் — ஜனவரி 1977

தேனோலை

கட்டணம் அனுப்பிவிட்டீர்களா ?

முகவரி:
ச. பிரகதம்
4/11, 2வது சடைய படையாச்சி தெரு
வேலூர்ச் சாலை
திருச்செங்கோடு-637211

ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00

எழுத்துச் சீர்மை :

1. உகர ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக் குறி இடுதல் (ஜுரம், ஜூலை)

2. உயிர் நெடில்களுக்கு கால் வாங்குதல்

அகர முதல எழுத் தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு

அச்சிட்டவர்:
நாரா. நாச்சியப்பன்
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-600014.

வெளியிட்டவர் :
ச. பிரகதம் சென்னை-20.

மயிலாப்பூர் பட்டயம்

1. செய்திச் சுருக்கம்

பதினாறாம் நூற்றாண்டில், தமிழகத்தில் வாழ்ந்த செட்டி மக்களுள் ஆயிரம் வைசியர், கோமுட்டிகள், வீரமுட்டிகள் என்ற மூன்று பிரிவார் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றின் எழுத்து வடிவம். நகரத்தார் என்ற சொல்லைக் கோமுட்டிகள் ஒரு தடவை பயன்படுத்திய போது, ஆயிர வைசியர் அதனைத் தடுத்து, அக்கால மன்னனிடம் முறையிட்டு, காஞ்சீபுரத்திலுள்ள பழைய பட்டயத்தில் கண்டுள்ளபடி சமாதானம் அடைந்தனர். இந்த சமரசத்தில் ஆயிரம் வைசியருக்கு உதவி செய்த வீரமுட்டிகளுக்குச் சில மிராசுகள் வழங்கப்படுகின்றன.

2. சுவடி

கீழும் மேலும் செதுக்கிய மூங்கில் மரத் தப்பையுடன் கொண்ட கட்டு, 12 ஏடுகள் இருந்திருக்க வேண்டும். பனிரண்டாவது ஏடும், ஒரு தப்பையும் கிடைக்கவில்லை. இரண்டு மடலும் கொண்ட கெட்டி ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. இடது பக்கம் துளையிட்டுக் கோர்க்கப்பட்டுள்ளன 4 செ.மீ. அகலமும் 26 செ.மீ. நீளமும் உள்ளன. பார்வைக்குச் செப்பேடுகள் போலவே கனமாக உள்ளன. சில ஓலைகளில் ஓரம் சிதைந்து போய் விட்டதால், ஒன்றிரண்டு வரிகள் படிக்க இயலவில்லை.

3. கிடைத்த விதம்

"இராசகுமார நாடகம்" என்ற சுவடியைப் பிரதி செய்ய புலவர் இராசு அவர்களிடம் கொடுத்திருந்தேன். ஈரோட்டு வட்டாரத்தில் எங்கு எந்தக் கண்காட்சி நடந்தாலும், ஒரு சில ஓலைச் சுவடிகளாவது காட்சியில் வைப்பது வழக்கம். அதன்படி யாரோ வந்து வாங்கிச் சென்று விட்டனர். திரும்பி வரவில்லை, யாரிடம் கொடுத்தோம் என்பது புலவருக்கும் நினைவில்லை.

தேனோலை அடுத்த இதழுக்கு செய்தி தேட வேண்டிய நெருக்கடி நிலை வேறு.

ஈரோடு வட்டாரத்தில் பழஞ்சுவடிகள் வைத்திருப்போர் புலவர் இராசுவிடம் சேர்ப்பித்து விடுவர். அவ்வாறு சின்னியம்பாளையம், எஸ். கே. இராமசாமிக் கவுண்டர் அளித்த சுவடிகள் ஒரு இரும்புப் பெட்டியில் இருந்தன. பலதரப்பட்ட, பலவகையான சுவடிக் கட்டுகள், தனி ஓலைகள் எல்லாம் பிரிந்து ஏடேடாகக் கிடந்தன. ஒரு நாள் பிற்பகல் மூன்று மணி முதல் எட்டு மணி வரை அவற்றை அளவு வாரியாகவும், தன்மை வாரியாகவும் பிரித்து அடுக்கிக் கொண்டோம். பொருள் வாரியாகப் பார்க்கக் கூட நேரமில்லை.

பிரித்த பிறகு பார்த்ததில் பல அரிய சுவடிகள் இருப்பது தெரிய வந்தது. வெள்ளை அரசாங்கம், தற்போதைய முத்திரைத் தாளுக்குப் பதிலாக, ஓலையிலேயே, அரசாங்க முத்திரையை அழுத்திப் பதித்துத் தந்துள்ளது. நாலணு மதிப்புள்ள முத்திரை, அதில் ஒரு கிரயப் பத்திரம் எழுதப்பட்டுள்ளது. மற்றும் திருச்செங்கோடு, சிவன்மலை, கொடுமுடி செந்தூர் முருகன் மீது பாடிய பல பாடல்கள் கிடைத்துள்ளன. கிடைத்தவைகளுள் தலையாயது இப்பட்டயம் ஆகும்.

4. படித்தல்

புலவர் இராசு அவர்கட்கு நேரமில்லை. அதனைப் படித்துத் தர வேறு புலவர்களும் கிடைக்கவில்லை; கிடைத்தவர்களும் நழுவிக் கொண்டனர். பிறகே நானே ஒரு வழியாகப் படித்து எழுதினேன். பக்க எண் சரியாக இல்லாததால் அடுக்க இயலவில்லை. அதனால் வரிசை பாராமல் கிடைத்த ஓலையைத் தனித் தாளில் எழுதிக் கொண்டு, பின்னர் படித்துப் பார்த்துப் பொருள் வாரியாக அடுக்கிக் கொண்டேன். இறுதி ஓலையைத் தவிர மற்ற எல்லா ஓலைகளும் இருந்ததால், மன நிறைவு ஏற்பட்டது.

கோவைப் பழங்கலைப் பதிவு அலுவலர் திரு. இரா. பூங்குன்றன் எம். ஏ. அவர்கள் சில நாள் வந்து இரவில் தங்கி, ஓலையோடு ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தங்கள் செய்து அளித்தார்கள்.

இறுதியாகப் புலவர் இராசு ஒரு நாள் தங்கி இரவு முழுவதும் படித்து ஒப்பிட்டுப் பார்த்துச் செப்பம் செய்து அளித்தார்கள்.

குறிப்பாக நான்கு பக்க அளவில் விரிந்துள்ள மெய்க்கீர்த்திப் பகுதியை ஒப்பிட்டு ஆராய்ந்து பிழைகளைக் களைந்தார்கள்.

5. சுவடிக் காலம்

சுவடியின் எழுத்துக்கள் மிகவும் பழமையானதாகத் தெரிகின்றன. எனினும் திருந்திய நிலையில் உள்ளன. கூறப்பட்ட நிகழ்ச்சியின் காலம் கி.பி. 1546 ஆக இருக்கலாம். அப்போது பட்டயத்தில் எழுதியதை இரண்டு அல்லது மூன்று முறை பிரதி செய்த பின் எழுதிய ஓலையாக இருக்கலாம். எனவே சுமார் 300 ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கொள்ளலாம்.

6. சுவடித் தமிழ்

1. ஒற்றுக்குப் புள்ளி இல்லை.
2. கிரந்த ம பயன்படுத்தப்பட்டுள்ளது.
3. பிள், ண்ட, க்கு, ப்ப ஆகியவை சில இடங்களில் கூட்டெழுத்துக்களாக உள்ளன. பெரும்பாலான இடங்களில் பிரித்தே எழுதப்பட்டுள்ளன.
4. உயிர் மெய் எகர, ஏகார முன்கொம்பில் வேறுபாடு தெரியவில்லை.
5. நெடில் காலுக்கும் ரகரத்திற்கும் வேறுபாடில்லை.
6. இ, மு, டு வேறுபாடு தெரியவில்லை.
7. ந, ங வேறுபாடு சில இடங்களில் தெரியவில்லை.
8. ழ, ள, ல வேறுபாடின்றிப் புழங்கியுள்ளன.
9. பேசினால் சரியாகத் தெரியும், எழுதினால் பிழையாக இருக்கின்றது.
10. ஒரு ஏட்டின் ஒரு பக்கத்தில் சுமார் 10 வரியும், மேலும் உள்ளன.
11. முதலில் சரியாக இருந்த சுவடி எண்கள், பின்னர் தவறுக அடுக்கப்பட்டு, அதன்படி எண்ணிடப்பட்டுக் குழப்பமாக உள்ளது.
12. பதினோரு ஏடும் அடிக்கட்டையும் சுமார் 23 மி.மீ. கனம் உள்ளன.

7. பட்டயத்தின் காலம்

இதன் மூலப்பட்டயம் செம்பில் எழுதியிருக்க வேண்டும். இதில் முதல் 4 ஏடுகள் மெய்க்கீர்த்தியாகவே உள்ளன. விஜய நகரக் காலத்து மெய்க்கீர்த்தி. மெய் குறைந்தும்,கீர்த்தி மலிந்தும் உள்ளன. எனினும் திரிபுவன கட்டாரி சாளுவன் என்ற மன்ன னது பெயர் தெளிவாக உள்ளது. சாளுவ வம்சம் விஜய நகர வம்சத்தில் ஒரு பகுதியினர். சுமார் 420 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந் தவன்.

சுவடியில் "சாலிவாகணனுக்குப் பிரதி ராச்சியம் பண்ண" என்ற சொற்களுக்குப் பின் "சுபாஉ" என்று காணப்படுகிறது. அது சாலிவாகன சகாப்த ஆண்டைக் குறிக்கலாம் என்று தோன்று கிறது. பிரதி செய்த பொழுது சரியாக எழுதப்படவில்லை. ஆனால் பராபவ வருஷம் சித்திரை மாதம் 25 தேதி எனப் பின்னால் வருவ தால் அந்த ஆண்டு கி.பி. 1546 ஆக எடுத்துக் கொள்ளலாம்.

சாமிக்கண்ணுப் பிள்ளை அவர்களின் "இந்தியன் எபிமரீஸ்', என்ற நூலிலிருந்து கி.பி. 1546 சித்திரை 25க்கு நேர் ஆங்கிலத் தேதியைக் காணலாம்.

8. பட்டயம் எழுதிய இடம்

முதல் மூன்று ஓலையில் உள்ளவை மெய்க்கீர்த்திப் பகுதி யாகும். அதன் பின் ஆயிர வைசியர் குடித்தலைவர் வாழ்க, வாழ்க என்று முற்றுப் பெறுகிறது. அடுத்து காமாட்சி யம்மன் காஞ்சீபுரத்தில் கம்பையாற்றங்கரையில் ஒரு மாமரத்தின் நிழலில் கடுந்தவம் செய்த விதம் கூறப்பட்டுள்ளது. செப்பு ஊசி முனை யில், பெருவிரலை ஊன்றி நின்று அருந்தவம் புரிந்தார்களாம். அன்னையின் அன்பைச் சோதிப்பதற்காக, ஈசன் தன் தலையி லுள்ள கங்கையை எடுத்து விடுகிறார். அதனால் கம்பையாற்றில் வெள்ளப் பெருக்கு நேருகிறது.

வெள்ளத்திற்குப் பயந்த அன்னை, ஆற்று மணலில் ஒரு லிங்கம் பிடித்து வைத்து, அதனைக் கட்டிப் பிடித்துக் கொள்ளு கிறார். அதனால் மகிழ்ந்த ஈசன் வெள்ளத்தைக் குறைத்துக் கொண்டு, ஏகாம்பரீஸ்பரராக அங்கேயே எழுந்தருளுகிறார். ஐப்பசி பூரநட்சத்திரத்திலும், பங்குனி உத்திரத்திலும் பெருந்திரு விழாக்கள் நடைபெறும் அத்தகைய காஞ்சீபுரம் காமாட்சியம்மன், ஏகாம்பரீஸ்பரர் சந்நதியில் இப்பட்டயம் எழுதப்பட்டது.

7. நிகழ்ச்சி

ஐந்தாம் ஏட்டிலிருந்துதான் செய்தி தொடங்குகிறது. அருமையான நிகழ்ச்சி.

சென்னை நகரத்தின் ஒரு பகுதியாக உள்ளது திருமயிலை என்னும் மயிலாப்பூர், அக் காலத்தில் மயிலாபுரி என்று வழங்கி வந்தது. அங்கு ஒரு தண்ணீர்பந்தல். அதில் நீர்மோரும் கொடுக்கிறார்கள், நீர்மோர் வழங்க ஒரு பிராமணரை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

அந்த வழியாக ஆயிர வைசியர்களின் தலைவர் பல சரக்குப் பொதி பிடித்துக் கொண்டு வருகிறார். தண்ணீர்ப் பந்தலில் அமருகிறார். பிராமணர் சொம்பிலே நீர்மோர் கொடுக்கிறார், அந்தச் சொம்பிலே "நகரத்தார் தர்மம்" என்று எழுத்து வெட்டியுள்ளது. அதைப் படித்த தலைவர் இது யாருடைய தர்மமென்று பிராமணரைக் கேட்கின்றார். இது கோமுட்டிகள் தர்மமென்று பிராமணர் சொல்கிறார். உடனே தண்ணீர் குடிக்காமல் சொம்பைக் கீழே போட்டு உடைக்கிறார். 'சொம்பேனுடைத்தீர்' என பிராமணர் கேட்கிறார்.

"எங்களுக்கே உரிய 'நகரம்' என்ற பட்டத்தை கோமுட்டிகள் எவ்வாறு எழுத்து வெட்டலாம்" என்று கேட்கிறார். உடனே பிராமணர் சென்று கோமுட்டிகளிடம் செய்தி சொல்ல, அவர்கள் வந்து ஆயிரத் தலைவரை மறித்துக் கொள்கின்றனர்.

நகர விருது, கருடக் கொடி, கம்பிக் காவடி, ஆணி கோர்வை, உரைகல், முதலிய விருதுகள் யாருடையது என்பதில் தகராறு வந்து விடுகிறது.

ஆயிரத் தலைவர் வீரமுட்டிகள் என்னும் சாதியாருடன் ராயரைக் கண்டு முறையிடச் செல்கிறார்கள். இதையறிந்த கோமுட்டிகள், தாங்களும் ராயரிடம் செல்லப் புறப்பட்டு வருகின்றனர். வரும்போது கெருடக் கொடி பிடித்து வருகிறார்கள். அதைக் கண்டு ஆயிரம் வைசியர், வீரமுட்டிகள் போய், தகராறு தீராதபோது நீங்கள் எவ்வாறு கெருடக் கொடி பிடிக்கலாம் என்று அதைப் பறித்துக் கொள்கிறார்கள். அந்தச் சண்டையில் 12 பேர் காயம் பட்டு விடுகின்றனர்.

இந்த சண்டை பற்றிய செய்தியை ராயர் அறிந்து நம்மிடம் வரும்போது, நடுவழியில் எவ்வாறு சண்டை போடலாம் என்று கேட்டு எல்லோரையும்—கோமுட்டிகள், வீரமுட்டிகள், ஆயிரம் வைசியர் மூன்று குலத்தாரையும் சிறையில் அடைத்து விடுகிறார்.

இந்தச் சேதியை அறிந்த சமுதாழி வீரம்மாள் என்கிற வீரமுட்டி இனத்தைச் சேர்ந்த பெண் ராயரின் மாளிகையின் ஓலிமுக வாசலில் சென்று அமர்ந்து கொள்கிறாள். [இந்த இடத்தில் நான்கு வரிகள் சிதிலமடைந்துள்ளதால் ராயர் என்ன செய்தார் என்று விளங்க வில்லை.] ராயர் அவர்களுடைய குதிரையை வீரமுட்டிகள் அடக்கி, வீரம்மாளை மீட்கின்றனர். பின்னர் குதிரையையும் விடுவிக்கின்றனர். இதனால் மகிழ்ந்த ராயர், வீரமுட்டிகளுக்கு வெகுமானங் கொடுத்து வந்த காரியத்தை வினவுகிறார்.

வீரமுட்டிகள், வந்த விவரத்தைக் கூறவே, அதை ராயர் கேட்டு, கோமுட்டிகள், ஆயிரவைசியர் ஆகிய இரு இனத்தாரையும் அழைத்து, காஞ்சீபுரம் காமாட்சி யம்மன் கோயிலிலே உள்ள செப்புப் பட்டயத்தை எடுத்துப் பார்த்து, அதனை இருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு கூறி ஒப்பந்த முறியில் கையொப்பம் பெறுகிறார். தோற்றவர் பன்னிரண்டாயிரம் பொன்னும் பன்னிரண்டு தலையும் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்கிறார். தலை கொடுத்தல் வென்றவருக்குப் பனிரண்டு பேர் அடிமையாதல் ஆகும். அதனை நிறைவேற்றி வைக்க ஒரு அதிகாரியையும் கூட அனுப்புகிறார்.

வழிச் செலவுக்கு ஆயிரம் பொன் ஆகின்றது. கோயிலில் மூவாயிரம் பொன் கட்டி பட்டயத்தை எடுத்துப் பார்க்கின்றனர்.

பட்டயத்தில் நகரவிருது, கருடக் கொடி, கம்பிக் காவடி, ஆணி கோர்வை, உரைகல் ஆகியவை, ஆயிரம் வைசியருக்கு உரியவை என்று இருந்தது. இதை அறிந்த கோமுட்டிகள் மயக்கம் போட்டு விழுந்து விட்டனர். கோமுட்டிகள் பனிரண்டு பேர் ஆயிரம் வைசியர்களிடம் அடிமை யானுர்கள். பிள்ளை புகுதல் என்றால் அடிமையாதல்.

8. வெகுமதிகள்

ஆயிரவர்கள் வெற்றி பெறக் காரணமாக இருந்த வீரமுட்டிகளுக்கு, சில மிராசுகளை வழங்கி மரியாதைகள் செய்கிறார்கள். (இந்த இடத்தில் மூன்று வரி சிதிலமாகிவிட்டதால், படிக்க முடியவில்லை) கடை வியாபாரத்தில் தானியங்களில் ஒரு பிடி தரப்படும். முருங்கை பயிரிட்டவர்கள் மூன்று பணம் தருவர், அவரை பயிரிட்டவர் இரண்டு பணம் தருவர். தலை மேல் வைத்துச் சுமக்கக் கூடிய தண்ணீர்க் குடத்துக்கு ஒரு பணம் தருவர். (இது வேடிக்கையாக உள்ளது.)

செட்டிப் பெண்கள், துணையின்றிச் செல்லக் கூடாது என்றும், கோமுட்டிகள் கச்சும் போட்டு வேட்டி கட்டக் கூடாது என்றும் திட்டம் செய்கின்றனர்.

காஞ்சீபுரம் காமாட்சி யம்மன் கோயில் பனிரண்டாம் படியில், தாக்கு தீர்த்தக் கரையில், கழுத்தில் மாலை அணிந்து கொண்டு, வலக்கை போட்டு சத்தியம் செய்து தருகின்றனர். இவ்வாறு நடவாதோருக்குச் சில தோஷங்கள் கூறப்பட்டுள்ளன.

9. பெறுவோர்

இந்த உரிமைகளைப் பெறும் வீரமுட்டிகள் 22 பேர். அதில் ஆண்கள் 20 பேர், பெண்கள் இரண்டு பேர். அவர்களின் சந்ததி களும் பெறுவர். இவர்கள் 14 ஊர்களைச் சேர்ந்தவர்கள்.

10. வழங்குவோர்

இந்த உரிமைகளை வழங்குவதாக ஏற்றுக் கொண்ட ஆயிரம் வைசியர் 21 பேர். 17 ஊர்களைச் சேர்ந்தவர்கள், கொடுமுடியி லிருந்து பச்சையப்ப செட்டியார், கோவிந்தப்ப செட்டியார் என்று இரண்டு பேர் கலந்து கொண்டுள்ளனர்.

11. எழுதியோர்

இந்தப் பட்டயத்தை எழுதியவர்களும், முன்னால் இருந்தவர் களும் இருவர். ஒருத்தர் காஞ்சீபுரம் ஏகாம்பரம் பிள்ளை. அடுத்தவர் பட்டணசாமி.

12. இறுதி

பட்டயத்தின் கடைசிப் பகுதி கிடைக்கவில்லை. அதில் கூடு தலான செய்திகள் ஒன்றுமிராது.

13. நகரத்தார் யார்

இங்கு நகரத்தார் என்று பட்டயம் வழி உறுதியானவர் ஆயிரம் வைசியர் என்னும் குடியினரே ஆவர். நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும் நகரத்தார் என்றே அழைக்கப்படுவர். ஆனால் இப் பட்டயம் கூறுவது அவர்களை யல்ல, ஆயிரம் வைசியர், கோமுட்டிகள், வீரமுட்டிகள் ஆகிய இனத்தார் இன்றும் சிறப் போடு வாழ்கின்றனர். எனினும் இப் பட்டயத்தை ஆயிரம் வைசிய மரபினர் கூடி எழுதியுள்ளனர். கோமுட்டிகள் இதில்

ஒப்பம் இடவில்லை. ஆயிரவர்களே, வீரமுட்டிகளுக்கு, சில உரிமைகள் வழங்குவதால் கோமுட்டிகள் ஒப்பமிடும் தேவை ஏற்படவில்லை.

14. சமுதாயம்

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் தமிழ் நாட்டின் பல ஊர்களிலுமிருந்து வந்து கலந்து கொண்டுள்ளனர். சமுதாய வழங்கங்களில் பரவலாக பெரும்பாலோர் கலந்து கொண்டு, பெரும்பான்மை முறை என்றில்லாமல், கருத்தொற்றுமை முறையில் தீர்மானங்கள் செய்யப்பட்டமை புலனாகும்.

15. முடிப்புரை

அரசியல் வரலாற்றுச் செய்திகள் குறைவு. ஆனால் சமுதாய நிலைமை அறிய, இது ஒரு முதன்மையான பட்டயம் ஆகும். இப்பட்டயத்தின் வேறு நகல் வைத்திருப்போர், அல்லது செப்புப் பட்டயம் வைத்திருப்போர், தேனோலை ஆசிரியருக்குத் தகவல் அளித்திட வேண்டுகிறோம். இப் பட்டயத்தின் மீதான ஆராய்ச்சிக் குறிப்புகள் வரவேற்கப்படுகின்றன.

காஞ்சீபுரம் காமாட்சி யம்மன் கோயிலில் அக் காலத்தில், தமிழக சமுதாயச் சூழலில் முதன்மை பெற்ற அதிகாரபூர்வமான பல பட்டயங்கள் இருந்த 'ஆவணக் கிடங்கு இருந்துள்ளதை அறிகின்றோம்.

பட்டயம்

ஸ்ரீறி மகாகெங்கணபதி நமா

மீனாட்சி துணை

முதல் ஏடு—முதல் பக்கம்

சுபஸ்ரீமன் மகா மண்டலீசுவரன் அனைய ராய விபாடணன், யரசராட்டந் தவிள்த்த நாவிசைக்குதவுராய கண்டன், மூவராய கண்டன், கண்ட நாடு கொண்டு, கொண்ட நாடு குடாதான், பாண்டிய மண்டலத் தாபனா சாரியன், சோழ மண்டலப் பிறதீஷ்ட்டானா சாரியன், தொண்ட மண்டல சண்டப் பிரதாபன், ஸ்ரீமது அசுபதி, கெசபதி, நரபதி, நவகோடி நாராயணன், துலுக்கர் தழவிபாடன், துலுக்கர் மோகந்தவித்தான், ஒட்டியர்கள் விபாடன், ஒட்டியர் மோகன்ந் தவித்தோன், துளுவர் தள விபாடன், துளுவர் மோகன்ந் தவிள்த்தோன், பூருவ, தெட்சிண, பட்சிம, உத்தர, குண, சத்தி சமுத்திராதி, கொட்சி, கோழிக்கூடு, துலுக்காணிய மத்தும்

முதல் ஏடு—இரண்டாம் பக்கம்

எம்மண்டலமும் கொண்டு, விசைய நகரத்து, விகுடதடமன்... சிங்காசனத்தி லெளுந்தருழி, கெச வேட்டை கண்டருழிய ராசாதி ராசன், ராச மார்த்தாண்டன் ராச தன்ம, ராச கெம்பீரன், ராசப் பிறதாபன், மகுடப்பிறதாபன், வீரப்பிரதாபன், ராசராச பயங்கரன், துஷ்ட்டர் கண்டன், துஷ்ட நெஷ்ட்டூரன், நரலோக ராயணன், நவகண்டச் சக்கிரவர்த்தி, மலை கலங்கினு மனங் கலங்காத தலைவன், மார்பு காவலன், அஷ்டதிக்கும் எமபயங்கரன், படை கண்ட ராசாழி, பரிமேல் நகுலன், கிரிமே ருதையன், வில்லால் விசையன், சொல்லாற் றருமன், வாழுக்கு வீமன், அளகுக்கு அனங்கன், யரிவுக் கு) அதிகன், அரத்துக்கு அரிச்சந்திரன், ஒழிவுக்குக் கதிரோன், சமரன், கோலாகலன், உலக முழுது(ம்) ஆண்டு கு(ை)றவறக் கீர்த்தி கொண்டருழிய மகாராயர், அஷ்ட்ட

திக்கும் எமபயங்கரன், உத்தண்ட மண்டலீகர் கண்டன், ஈளந் திரை கொண்ட இந்திராணி

இரண்டாம் ஏடு—முதல் பக்கம்

சாடிகார கண்டன், சுருத்தாள மதியாத மன்ன மணவாளன், கெடித் துருக்க சுருத்தாளன், [1]திரிபுவன கட்டாரி சாளுவன், மேதினி மீசுபரர் கண்டன், பட்டுக் கட்டாரி சாளுவன், பதி நெட்டுக் கோட்டத்து மன்னியர் கண்டன், கன்னடிய குலைகாரன், இடருவாச் சம்மட்டி, விருதுக்கு வெட்டிவிருதருத்த கண்டன், ஆரிய கேசரி, யருபதகேசரி, திசை விப்பி, பருபதவிப்பி, விசைய கிரி, பருவதகிரி, ருத்திரகிரி, சந்திரகிரி, இன்னான கிரியுங் கொண்ட ராயர், ஆலாந்தீவு, யரசன்றீவு, குச்சரர் தீவு, நவதீவுங் கொண்டருழிய நரலோககண்டன், வங்கி நாராயணன், சங்கு சக்கிர கேசவதார, புண்டரீக புருசோற்தமன் அருள்பெற்ற மகாராயர், புனுகு, சவ்வாது, கஷ்த்தூரி, பட்சைக் கற்பூரம், பன்னீர், பூமியி(ல்) அதிசய பொருந்து வைவித்து இப்படிக் கொற்ற—இப்பலவஷ்த்து வகைகளு, பலநவமணி முதல் காணிக்கையாக்க கனமுடன் மகிள்——

இரண்டரம் ஏடு—இரண்டாம் பக்கம்

சகல சாம்மிராட்சிய வேட்டைக்கரசன் சிவபூசை துரந்தான், ருத்தர (மண்ட) லிகர் பூரணரான உபை காவேரி வல்லவன், மாணிக்க சிங்காதனமும், யாதி கெருட கொடியு(ம்) வைய்குந்த வளநாடு விறுமாவின் கைய்-கமல கண்டிகைத் தெரு தேவேந்திரன் கையில், செய்வரான மூவரசு தேவன் கையில், கலிமாருதப் புரவியும்ந் தேவியின் கையில், பஞ்ஞாக முரசு, வருணதேவன் கையில், பம்பா நதியும், தணிகையம்பதியிற் சண்முகரழித்த ஆணிசந் தோன்றிய அந்தமாலையும், பூவரி லொருவன் முடக்கு மாணிக்கக் கோர்வையிடு நீ என்ன, நல்ல தென்(று) எண்ணி, நலம்பெற வாங்கி, அந்த வேள் மடக்கி ஆள உபாயன் சீற் பெறச் சொற்கத்தில் ராசன் தன் கையில் கொடுக்கப் புந்தி மகுள்ந்து, புளகிதமாக, இந்தி வுபாய(ம்), எழில் பெர வரிந்து தந்திரவாதியர் சங்கத் திருந் தெகளமாகும் பிரவும், மணி முடிச் சோளன் அங்கவர் தன்னை யவனியில் மதிக்க, நீடுதுலாத்தில் நிரையது கண்டோ ரெண்டிசை தன்னில்.

---

1 விஜய நகர அரச மரபில் ஒரு கிளை சாளுவ வம்சம். திரிபுவன கட்டாரி சாளுவன் அதில் ஒருவன். அவனது காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியே இப் பட்டயச் செய்தி. கி. பி. 1546 ஆக இருக்கலாம்.

மூன்றாம் ஏடு—முதல் பக்கம்

இக்குவல(ய)த்தில் தெண்டிசை புகளச், செகதலம் புகள, வேதை நஞ்சுண்டுரோன் வாசமாம் பட்சை மாகதந் தன்னில் மஞ்சாடி பொன் வளம் பெற்றோன் கொடிய காவேரி தன்னைக் கரையது கண்டோன், கம்பனார்க் கோயில் செம்பொன்னால் மேய்ந்தோர், செம்பியன் றன்னைச் செனத்தினால் வென்றோர் முடி தவிளரசர் முன்பினாலிருந்து நாகலோகத்து நாக கன்னிநாத ———கன்னியை நலம்புணர்ந்து நற் பொற் பாடகமும், கருநெல்லிப் பளமுஞ்———பெற்றது, சீருடன் வந்தோம், ஆணிக் கனக யரியதோர் நாற்குதீ———வும், சீனி சீமைப்பாப் பட்டும், பட்டாவழி, வரிவழி(ந்)திட்ட சந்தனம், புனுகு, கஷ்த்தூரி, பச்சைக் கற்பூரம்——

இங்கே முதல் பக்கத்தில் இரண்டு வரிகளும் இரண்டாம் பக்கத்தில் இரண்டு வரிகளும் சிதைந்துள்ளன.

சடையணிந்த மான், மளுவு..............சேகரன் அன்பாயி அருணை அணணாமலை அக்கிளிக் கம்பமாய், நீர்–நிளலளித்து தனக்கு விதனமாக ஆனதோர் பந்த(ல்) அரசாணிக் காவில் வேட்டை நாய் தன்னைக்...கட்டி நாவசை செய்த நக்கப் பிரதா பன், திசை பகத் திரையைக் கிரிதியாத...........பத்திட்டநித்திய வைபோகிரதன், குபேரனைப் போல குடைதனந் தளைத்திட்டு......

இப்படிக் கொற்றை இணையில்லா (ை)வசியர் யாயிரங் குடித் தலைவர் வாழ்க, வாழ்கவே.

ஸ்ரீமது பூமியில் [1]செகரமான மகா்தேவி வந்து, கம்பை யாற்றின் கரையில், ஒரு மாமரத்து நிளலில், செப் பூசி முனையிலே, அகோரமான தெவசு, பெருவிர(ல்) ஊன்றி, அரியதவசு பண்ணி

நான்காம் ஏடு —முதல் பக்கம்

இருக்கையில், பரமேஷ்பரன் தேவியினிடை அன்பு சோதிக்க வேண்டித் தம்முட சடையிலிருக்குர கெங்கையை அனுப்புகையில், தேவி பயந்து, கம்பையாத்தில் திரை மணல் லிங்கமாகச் செ(ய்)வித்துப் பிடித்து அர்சனை பண்ணி, முலைக்குரி, வணக்குரி பட, அந்த லிங்கத்தைக் கட்டிக் கொள்ளுகையில், சிவன் கெங்கையை நீக்கிப் பிறதிஷ்ட்டமாகக் காச்சி குடுத்துக் காமாட்சி பூசித்த ஏகாம்பர லிங்க மென்கிற திருநாம முண்டாய், [2]அற்பிசை

---

1. சிகரமான
2. ஐப்பசி

பூரமு(ம்), மூன்று விமானங்கள் கூடி வருகிற பங்கினி உத்திரமுங், கருமாரி பாச்சலு இப்படி இருக்கப்பட்ட காஞ்சீபுர(ம்) ஏகாம்பரீஷ் பரன் காமாட்சி தேவி முன்பாக,

இவர்க ளனுக்கிரகத்தினாலே, சாலிவாகணனுக்குப் பிரதி ராச்சியம் பண்ணச் சுபாஉ ஸ்ரீமண் மகா மண்டலாதீசுபர—

நான்காம் ஏடு—இரண்டாம் பக்கம்

ராசாதி ராசன் ராச மார்த்தாண்டன் ராச்சிய பரிபாலனம் பண்ணுகையில் [1]பராபவ ஷு சித்திரை மீ உ௰௫ (25)

எழுதி விச்ச [2]தாம்பூர சாதனம்.

ஸ்ரீமது பட்டணச் சுவாமியார், நாலு பாளையம் நகரத் தாரு(ம்) நாலு தேசத்து நகரத்தாருங் [3]காஞ்சீபுரம், படைவீடு, பளங் கோயில்த், திருப்பதி, காசி, பள்ளிப்பட்டு, வேலூர், சந்திர கிரி நந்தியாலம், நெல்லூர், மாயாபுரி, இக்கேரி, வசவபட்டணம், மதுரை, தஞ்சாவூர், செஞ்சி மற்றுமுண்டான தேசத்து நகரத் தாரும்(ம்), பல்ஹூர் நகரத்தாரு(ம்) ஆயிரவர்களுக்கும், [4]ஆயிரோக்கியமு(ம்), அஷ்டாசுரியமும், சந்தான மிற்தியுந் தெய்வ பிறசாதமுங், குருப் பிரசாதமு(ம்), ராசப் பிரசாதமு மேன் மேலு முண்டாகத் தக்கதாகவும். ஏகாம்பரீஷ்புரன் காமாட்சி யம்மன் சந்நிதியிலும் ஆசிர்வதித்து வரவிடவேண்டிய ஆசீர் வாதம்.

ஆயிரவருக்குங் கோமுட்டியளுக்கு(ம்) ஒண்ணுக் கொண்ணு [5]விகாதம் வந்து சண்டையிட்டுச் [6]செமுசான விவரம்.

ஐந்தாம் ஏடு—முதல் பக்கம்

[7]மயிலாபுரியிலே கோமுட்டிகள் தண்ணீர்ப் பந்தல் கட்டி வைய்த்து, நீர்மோரு குடுக்கிற செம்புலே, ''நகரத்தாருட தண்ணீர் பந்த''லென்று பேர் வெட்டிப் போட்டிருந்தார்கள். அப்ப அந்தப் பாதை வழியே நம்முட ஆயிரத் தலைவரு பலசரக்

1. கி. பி. 1546
2. தாமிரப் பட்டயம்
3. இங்கு 16 முன்மையான ஊர்கள் கூறப்பட்டுள்ளன.
4. ஆரோக்கியம்
5. வாக்குவாதம்
6. சமாதானம்
7. சென்னை நகரத்து மயிலாப்பூர்

குப் பொதி பிடிச்சுக் கொண்டு வந்தார்க(ள்) அந்தப் தண்ணீர்ப் பந்தலிலே வந்து [1]இருந்தார்கள்.

தாகத்துக்கு நீர் மோர் கேட்டார்கள். பிறாமணர் நீர்மோர் கொண்டு வந்து குடுத்தார். அந்தச் செம்பிலே விலாசத்தில் எளுத்தைப் பார்த்து, ஆயிரவர்களிட, நகரத்தாருடைய தற்ம மென்ற எளுத்தைக் கண்டு, அந்தப் பிறாமணனை யாருடைய தர்மமென்று கேட்டார்.

"இது கோமுட்டி தற்ம"மென்று சொன்னார். சொன்ன வுடனே, தண்ணீர் குடியாமல்,

ஐந்தாம் ஏடு—இரண்டாம் பக்கம்

அந்தச் செம்மை உடைத்தார்கள், அப்ப அந்தப் பிறாமணன் "செம்பே(ன்) உடைத்தீ(ர்)?" என்று கேட்டார்.

அதுக்கு நம் மாயிரத் தொருவர் சொன்னது : "எங்கள் பேரைக் [2]கோமுட்டி யெளுத்து வெட்டுவா(ன்) என்று உடைத் தோ(ம்)" என்று சொன்னார்க(ள்). அதைக் கேட்டுப் பிறாமணன் போய் கோமுட்டி உடனே சொன்னார்.

அந்தக் கோமுட்டியள்த் தண்டத்தாரு வந்து ஆயிரத் த்லைவரையு [3]மரித்துக் கொண்டு "செம்பேனுடைத்தீ" ரென்று கேட்க, அயிரத் தலைவருஞ் சொன்னது : "எங்களிட நகரத்தை உங்களுது என்று எப்படி எளுத்து வெட்டுவீ" ரென்றார்.

கோமுட்டிகள் "நகரவிருது எங்களுது" என்றார். "ஆன படியினாலே நாங்கள் வெட்டினோ" மென்றார். ஆகச்சே ஆயிரத் தலைவருக்கு [4]உரசு வந்து, "எங்கள் நகர விருது, கெருடக் கொடி, கம்பிக் காவடி, (வை)வசியர் குலமுறைகள், ஆணி கோர்வை, மூணுஞ் சாதியு(ம்), பவுத்திரமு(ம்), பின் குடுமி இதுகள் எங் களுக்கேயல்லாமல் உங்களுக்கு யில்லை" என்று ஆயிரவர்கள் சொன்னார்கள்.

ஆறாம் ஏடு—முதல் பக்கம்

அப்போது கோமுட்டியள் "எங்களுக்கே யல்லாமல் உங் களுக்கு இல்லை" என்று சொல்ல இப்படி, ஒருத்தர்க் கொருத்தர்

1. அமர்ந்தார்கள்
2. எங்கள் பேரை கோமுட்டி எப்படி எழுத்து வெட்டுவான் ?
3. தடுத்துக் கொண்டு
4. கோபம்

சண்டைப் பட்டு, நகர விருது, கெருடக் கொடியும், (ை)வசிய குலமுங் கம்பிக் காவடியும் பூணூல் கம்பிக் காவடியும், பவுத்திர மோதிர(ம்), உரைகல், யாணி கோர்வையு(ம்), உன்னுது என்னுது வென்று இப்படி ஒருத்தர்க் கொருத்தர் விசாரப் பட்டிருக் கையில் ஆயிரத் தலைவர் எல்லோருங் கூடி யோசனை பண்ணிக் கொண்டு [1]வீர முஷ்டிகளண்டைக்குப் போய், வீர முஷ்டிகளை அழைத்து ஆயிரவர்கள் சொன்ன விபரம் :

"எங்களுக்குங் கோமுட்டியளுக்கு சாதி விருது நிமித்தியமாக, உன்னுது என்னுதென்று, ஒருத்தர்க் கொருத்தர் சண்டை பட்டுக் கொண்டு இருக்குரோம். ஆகையினாலே நாங்கள் உங்களண் டைக்கு வந்தோ மென்று சொல்லி, நீங்கள் எங்களுக்கு சிவ சமையத்துக்கு கற்தாவலவோ, ஆகையாலே நீங்கள் எங்களோடே.

ஆறாம் ஏடு—இரண்டாம் பக்கம்

வந்து ராயர் சமூகத்துக்கு அறிக்கை பண்ணி விச்சு எங்கள் காரியமுஞ் செயம் பண்ணித் தரவேணு" மென்று ஆயிரவர்கள் சொன்னார்கள். அதுக்கு வீரமுட்டிகள் சொன்னது : "அப்படியே செய்து தருகிறேதா" மென்று பரவசம் பண்ணிக் குடுத்தார்கள்.

அந்தப் பிரகாரத்துக்கு வீரமுட்டிகள் கூடிக் கொண்டு ராயர் சமூகத்துக்குப் போகவேணுமென்று போகச்சே, இந்தச் சேதி கோமுட்டிகளரிந்து, அவர்களுங் கூட வரச்சே, கோமுட்டிகள் கெருடக் கொடி பிடித்துக் கொண்டு வந்தார்கள். அந்தாயிரவர்கள் கண்டு வீரமுஷ்டிகளுடனே சொன்னார்கள்.

அது ஏதென்று கேட்போமென்று வீரமுட்டிகள் கோமுட்டி களை யழைத்துக் கேட்க, "நீங்களிருவரு விகாதமா யிருக்கையிலே எப்படிக் கெருடக் கொடி விருது பிடித்து வருவீர்களோ" வென்று வீரமுட்டியள் கேள்கையி லதுக்குக் கோமுட்டிகள் விசள வித்து வாசமாய்ச் சொன்னபடியினாலே, வீரமுஷ்டிகளு ஆயிரவர்களு கோமுட்டிகளு ஒருவற் கொருவர் பேதகத் திரேசங்கள் வந்து [2]வுயிற்றம் பண்ணி வீரமுஷ்ட்டிகள்

ஏழாம் ஏடு—முதல் பக்கம்

கெருடக் கொடியும் [3]பதித்துக் கொண்டு வரச்சே, அந்த் வுயித்தங்கழிலே பனிரண்டு பேர் காயம்பட்டு இருக்க அந்தச்

---

1. ஆயிரம் வைசியர், கோமுட்டிகள் தவிர மூன்றாவது இனம் வீரமுட்டி
2. யுத்தம்
3, பறித்துக் கொண்டு

சேதி ராயர் சமஸ்தானத்திலே செரல்லிக் கொள்ளுகையில் [1]அப்ப தேவமகாராயர் விசாரிக்குமளவில் "நம்மிட அண்டைக்கி வரச்சே வழியிலே ஒருவற் கொருவர் [2]கலாறுகள் பண்ணலாமோ" வென்று கோபம் பண்ணி "நல்லது, இருவரையுங் காவல் பண்ணச்" சொல்லிச் சொன்னபடியினாலே அப்படியே ஆயிரவர்களையு, கோமுட்டிகளையு வீரமுஷ்ட்டிகளை, இவர்களைக் காவல் வைய்த்து இருக்கச்சே,

இந்தச் சேதி வீரமுஷ்ட்டிகளுட பெண் பிள்ளை சமுதாழி வீரம்மாள் என்கிறவ(ள்) அறிந்து தங்களவர்களைக் கண்டு பேசாமல்; சரோரென்று வந்து, ராயர் கோட்டை ஒலிமுக வாசலிலே, சமுதாடு மூலையிலே குந்தி...

இங்கே ஒரு வரியும்
ஏழாம் ஏடு—இரண்டாம் பக்கம்
முதல் வரியும் படிக்க இயலாமல் சிதைந்துள்ளது.

ஏழாம் ஏடு—இரண்டாம் பக்கம்

விபகாரமுந் தீர்த்து வெகுமானமும் பண்ணி அனுப்புகிறோ மென்று ராயர் சொன்னபடியினாலே, அதுக்கு வீரமுட்டிகள் நல்லது யென்று சம்மதித்து வீர வயிராக்கியத்துடனே ஆற்பரித்து கொண்டு, [3]ராயானா ரேரப்பட்ட புரவியைக் குத்தித் தள்ளி விழுக் காட்டி, பிரிதி பாவாடம் பண்ணி வீரம்மா ளென்கிறவளை எளுப்பி நார்கள். பிறகு வீரபத்திர சுவாமி அனுக்கிரகத்திநாலே வீர வயிராக்கியம் பண்ணிப் புரவியும் எளுப்பிநார்கள்.

அதை ராயர் கண்டு மெத்தச் சந்தோசப்பட்டு வீரமுஷ்ட்டி யளை அளைத்து நாலு பேறுக்கு வெகுமானமுங் குடுத்து, நாலு பேறுக்குத் [4]தண்டிகையுங் குடுத்து, "நீங்க(ள்) அச்சப்பட்ட விவகார மென்ன" வென்று கேட்க அதுக்கு.

எட்டாம் ஏடு முதல் பக்கம்

வீரமுட்டி சொன்ன விபரம். சிவகோத்திரம் ஆயிரத் தலைவ ருக்குங் கோமுட்டியளுக்குஞ் சாதி விருது, கெருடக் கொடி, உரை கல், ஆணி கோர்வை உன்னு தென்னு தென்று விகாதப் பட்டி

1. திரிபுவன கட்டாரி சாளுவனாக இருக்கலாம்.
2. கலவரங்கள்
3. ராயர் ஏறும் அரசபுரவி
4. பல்லக்கு

ருக்குரா''ரென்று ராயர் சமூகத்திலே சொல்ல ராயர் கேட்டு, இறு வரை யளைத்து இருவற் கையிலே [1]முரி வாங்கி, யாதாமொருவன் [2]தோறுவையான பேருக்கு பனிரண்டு தலையும், பன்னீராயிரம் கொடுக்கக் கைய் முரி எழுதிக் கொண்டு, காஞ்சிபுரங் காமாட்சி சன்னதியிலே செப்பேட்டிருக்குதே அந்தச் செப்பேட்டைப் பார்த்துக் கொண்டு, அவர்களுக்கு எந்த எந்தப்படி நடக்குமோ அந்தப் பிரகாரம் நடந்து கொள்ளச் சொல்லி உத்தாரங் குடுத்தார். அபுராத முரி எளுதிக் கொண்டு காஞ்சிபுரத்துக்கு [3]மனுசரையுங் கூட்டி அனுப்பிவிச்சார்...

எட்டாம் ஏடு—இரண்டாம் பக்கம்

காஞ்சிபுரத்துக்கு போரபோது வழி பயணத்துக்குச் (செலவா யிரம்) பொன்னு, யம்மன் சன்னதிக்கு மூவாயிரம் பொன்னுங் குடுத்து ஆக நாலாயிரம் பொன்னுஞ் சிலவழித்து, செப்பே டெடுத் துப் பார்க்கிற போது,

கெருடக் கொடி, (ை)வசிய குலமுங் கம்பிக் காவடியு நகர விருது, ஆயிரத் தலைவரென்று(ம்) அவர்களுக் கென்(று) இருந்தது.

ஆகச்சே, கோமுட்டிக ளப்ப, மூச்சை போய் பனிரண்டு கோமுட்டிகள் ஆயிரவர்களுக்கும் [4]பிள்ளை புகுந்தார்க(ள்). இந்த அபதாரமுந் [5]தலையு நீங்கள் குடுக்க வேணுமென்று சொன்னார் க(ள்).

அப்ப, வீரமுட்டிகளிடத்தில் ஆயிரவர்கள் வந்து உபசாரஞ் சொல்லி அந்தப் பனிரண்டு தலையும் எங்களுக்காகத் தரவேணு மென்று கேட்க, அப்படியே அந்தப் பனிரண்டு தலையும் வீர முஷ்ட்டிகள் குடுத்தார்க(ள்). அப்போது கோமுட்டிகள் [6]அப செயம் பொத்தினார்கள்.

ஒன்பதாம் ஏடு—முதல் பக்கம்

ஆயிரவர்கள் செயம் பெற்று வாங்கி வீரமுட்டியளுக்கு நாலு வெகுமானமும் பண்ணி ''நீங்கள் எங்க விபகாரத்துக்குக் நிறுபாகம்

---

1. முறி—ஒப்பந்தம்
2. தோல்வி
3. அரசனது அதிகாரி
4. பிள்ளை புகுதல் என்றால் அமையாதல்
5. தலை கொடுத்தல் என்றால் என்னவென்று தெரியுவில்லை.
6. தோல்வியடைந்தார்கள்

நிறுபாகம் பண்ணி விச்சையளே'' என்று ரம்ப உபகாரஞ் சொல்லிச் சந்தோசப்பட்டு ஆயிரவர்கள் சகல பேரு(ம்) இருந்து வுங்களுக்கு என்ன வெகுபானங் குடுத்தாலுஞ் செல்லு மென்று ஆயிரவர்கள் சொன்னது: "உங்களுக்கு நாங்கள் வர்த்தனை மிராசு, கட்டளையிட்டு எளுதித் தருகிரோ'' மென்று "நீங்கள் சந்திராதித்தருள்ள மட்டும் அனுபவித்துக் கொள்ளுங்க''ளென்று ஆயிரவர்கள் சொல்ல வீரமுட்டிக ளதுக்கு நல்லதென்று சொன்னார்கள். அப்படியே ஆயிரவர்களுங் கூடி எத்தேசி காலமு நடக்க வேண்டிய [1]மிராசு கட்டளையிட்டுத் திட்டம் பண்ணின விபரம்: ஊருக்கூறு உற்ற மலைகட்கு

இங்கே ஒன்பதாம் ஏட்டின் இறுதியில்
ஒரு வரியும், மறுபக்கம்
முதல் இரண்டு வரிகளும் சிதில
மடைந்து விட்டன.

ஒன்பதாம் ஏடு—இரண்டாம் பக்கம்

கடைக்கி [2]பிடியள்ளும், முருங்கை உயிரிட்டவனுக்கு மூணு பணமு, அவரச் செடி போட்டவனுக்கு ரண்டு பணமு, கீரை போட்டவனுக்கு ரண்டு பணமு, தண்ணீர்க் குடம் தலைமேலே வச்சு வந்தால் ஒரு பணமும், செட்டிப் பெண்கள் தனி வழி வந்தால் குத்திப் போடவு, கோமுட்டி உடனே கச்சடம் போட்டு வந்தால் சாதிக்குப் புரம்பு தழ்ழிப் போடவு, அபுராதம் ஆறுபண வாங்கிப் போடவு, இந்தப் படிக்கிக் கட்டளையிட்டு காஞ்சீபுரங் காமாட்சி ஏகாமரீஷ்பரன் சன்னதியில் பனிரண்டாம் படியிலே உள்ள தாக்கு நீர்த்தமு மேலுக்குத் தோன்றி மாலையும் தரிச்சுக் கொண்டு, இந்தப்படி நடப்பிவிக்கிரோ மென்று வலக்கை குடுத்து சந்திரனுள்ள பாரம்பரைக்கு நடப்பிவிச்சுக் கொள்ளனும்.

பத்தாம் ஏடு—முதல் பக்கம்

இந்தப்படி நடப்பி வியாமல் யாதானு மொருவன் [3]வளுவு தலை பண்ணி நடப்பி வியாமல் போனாலும் விகாதம் பண்ணினாலும், அவர்களுக்குத் தங்கள் மாதாவைக் கொன்ற தோசமும் கெங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோசமும், குருவைக் கொன்ற தோசத்திலே போகக் கடவனாக. இந்தப் படிக்கு ஆயிரவர்கள், ஏகாம்பரீஷ்ப்பரன் காமாட்சியம்மன் பாத சாட்சியாக எளுதிக் குடுத்த தாம்பூர சாதனம்.

இந்தப்படி வீரமுஷ்ட்டிகள் சந்தோசமாகத் தாம்பூர பட்டையம் பாக்கு வெற்றிலையும் வச்சு.

[4]திருப்பரஞ்சுஞ்சு வீரப்பன், திருப்புரங்காடு கலியாண வீரப்பன், திருவாதவூர் உத்தண்டி வீரப்பன், அதவடி வீரப்பன்.

---

1. உரிமை
2. பிடி தானியம் அள்ளிக் கொள்ளுதல்
3. தவறினால்
4. ஆண்கள் 20 பேரும் பெண்கள் 2 பேரும் ஆக 22 பேர் வீரமுட்டிகள்

பத்தாம் ஏடு—இரண்டாம் பக்கம்

சிவயோகி வீரப்பன், திருவாரூர் குமார வீரப்பன், பிள்ளைப் பாக்கு ராச்ச வீரப்பன், ஒண்டி வீரப்பன். திருவெண்ணெய் நல்லூர் கலியாண வீரப்பன், நந்தியாலம் ஒரசு வீரப்பன், பருவத வீரப்பன், பருவத ராச செட்டி வீரப்பன், பொன்னேரிக் கோபுர வீரப்பன், மதுரை வீரப்பன், சமுதாடு வீரம்மாள், சங்கர வீரம்மாள், பல்லக்கு வீரப்பன், வெங்களூர் ரெங்க வீரன், சீரங்கப் பட்டணம் யோரச்சு வீரப்பன், திருவண்ணாமலைக் காளத்தி வீரப்பன், திருச்சிராப்பழி உத்தண்ட வீரப்பன், தஞ்சவூர் ரச்ச உத்தண்டி வீரப்பன், இவர்களுக்கு மிராசு கட்டளை இட்டுக் குடுத்தோம். இந்தப்படிக்கு அனைவரு மனுபவித்துக்கொண்டு சுகமாயிருக்கக் கடவனாகவும்.

இந்தப்படி ஆயிரவர்கள் பேர்

பதினோராம் ஏடு—முதல் பக்கம்

[1]காஞ்சீபுரம் பிங்காணி செட்டியார் ஏகாம்பர செட்டியார், பெரியபாளையம் புத்திரங் கொண்ட செட்டியார், ஆரணிய மண்டலம் அம்பலவாண செட்டியார், [2]கொடுமுடி பச்சையப்பன் செட்டியார், கோவிந்த செட்டியார், படைவெட்டி ஆபத்துக் காத்த செட்டியார் படங்கோயில் தீத்தஞ் செட்டியார் காஞ்சீபுரஞ் சிவாயஞ் செட்டியார், மாயபுரங் கரணப்ப செட்டியார், மதுரைச் சொக்கப்ப செட்டியார், திருச்சிறாப் பழிவெங்கிடப்ப செட்டியார், திருப்பதி ரங்கசாலைக் குருவப்ப செட்டியார், பள்ளிப்பட்டு வேலூர் பூமி செட்டியார், பிறதாப செட்டியார், சந்திரபதி வெங்கிட்ட செட்டியார்,

பதினோராம் ஏடு—இரண்டாம் பக்கம்

புதுச்சேரிப் பொன்னம்பல செட்டியார், இக்கேரித் திருவந்தி செட்டியார், வசவபட்டணம் பூலோக செட்டியார், தன்மபுரி ரகுநாத செட்டியார் மற்றுமுண்டான பலவூர் நகரத்தாருங்கூடி பாலக் காடு நகரத்தாரு இவர்க ளனைவோருங்கூடி எளுதிக் குடுத்த.

நன்மைக்கி.

[3]காஞ்சீபுரம் ஏகாம்பரம் பிள்ளை கையெளுத்து, இந்தப் படிக்கி பட்டணசாமி கையெளுத்து. இந்தப்படிக்கி நடப்பி விய்யாமல் அது மிஞ்சி றாச கெடுதி சொன்னால் தன் குரு சாமிக்குப் பனிரண்டு பொன்னும் றாச கெடுதிக்கிப் பனிரண்டு பொன்னும் அபுராதங் குடுக்கக் கடவீராகவும்.

இந்தப்படிக்குப் பலவூர் நகரத்தாரு சம்மதிச்சு எழுதிக்குடுத்த சிரேட்சய சாதான செப்பேடு. ஆசந்திர காலமு புத்திர பவுத்திர பார...

பனிரண்டாவது இறுதி ஏடு கிடைக்கவில்லை

---

1. ஆயிரவைசியர் 21 பேர்.
2. கொடுமுடியிலிருந்து இரண்டு பேர்.
3. எழுதியோர் இருவர்.

TN/MS (S) 55

ARO

OFFICE OF THE CURATOR
RECEIVED
29 ஜூன் 1977
GOVT. ORIENTAL MANUSCRIPTS



For Quality Retreading of
all Sizes of Tyres from
SCOOTERS TO TRACTOR
in our plant by highly skilled persons
Please Contact

THE ANAMLLAIS RETREADING COMPANY

225, Dr. Nanjappa Road,
COIMBATORE-641018

PHONE: 34500

BRANCH : TIRUNELVELI-627002

PHONE: 2590

ARO Symbol of SERVICE! SAFETY!! SAVINGS!!!

ஆசிரியர், வெளியிடுபவர் : கொடுமுடி சண்முகப் பிரகதம் 26, இந்திரா நகர், சென்னை-600020. அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-600014.